தலைப்பு **294** – தேசிய விலங்கியல் திணைக்களம்

-----------------------------------------------------

**1.** நிதிக் கூற்றுகள்

**1.1** முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

தேசிய மிருககாட்சி சாலை திணைக்களத்தின் 2019 ஆம் ஆண்டு திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று், அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று என்பவற்றை கொண்டமைந்த 2018 ஆம் ஆண்டு 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தில் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) உறுப்புரையில் உள்ளடக்கப்பட்டுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின்கீழ் கணக்காய்வுச் செய்யப்பட்டது. 2018 ஆம் ஆண்டு 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தில் 11(1) பிரிவு பிரகாரம் தேசிய மிருககாட்சி சாலை திணைக்களத்தின் நிதிக் கூற்றுகள் தொடர்பாக எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் உள்ளடக்கிய சாராம்ச அறிக்கை 2020 யூன் 10 ஆந் திகதி கணக்கு கொடுக்கும் அலுவலரிடம் வழங்கப்பட்டுள்ளது. கணக்காய்வு சட்டத்தில் 11(2) பிரிவு பிரகாரம் திணைக்களத்திற்கு ஏற்புடையதான வருடாந்த விபரமான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2020 யூலை 02 ஆந் திகதி கணக்கு கொடுக்கும் அலுவலரிடம் வழங்கப்பட்டுள்ளது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பில் 154(6) உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 ஆம் ஆண்டு 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தில் 10 ஆவது பிரிவு பிரகாரம் இவ்வறிக்கை பாராளுமன்றத்திடம் சமர்ப்பிக்கப்படுகிறது.

இவ்வறிக்கையில் 1.6 பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களால் ஏற்படும் தாக்கங்களைத் தவிர்ந்து, 2019 திசெம்பர் 03 ஆந் திகதிய 271/2019 ஆம் இலக்க அரச கணக்கு சுற்றறிக்கையின் ஏற்பாடுகளின் பிரகாரம் தயாரிக்கப்பட்ட அந்த நிதிக் கூற்றுகளிலிருந்து 2019 ஆம் ஆண்டு திசெம்பர் 31 ஆந் திகதியில் தேசிய மிருககாட்சி சாலை திணைக்களத்தின நிதிசார் நிலைமையினையும் அன்றைய திகதியில் முடிவடையும் ஆண்டுக்கான அதன் நிதிசார் செயலாற்றினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

1.2 **முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இலங்கை கணக்காய்வு தரநியமம்படி (இ.க.த.நி) பிரகாரம் என்னால் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டது. இந்த கணக்காய்வு தரநியமம்படி எனது பொறுப்பு, இவ்வறிக்கையில் நிதிக்கூற்றுகளின் கணக்காய்வு தொடர்பில் கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பகுதியில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளன. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை வழங்கும் பொருட்டு என்னால் பெற்றுக்கொண்டுள்ள கணக்காய்வு சாட்சிகள் போதுமானதும் பொருத்தமானதெனவும் நம்புகின்றேன்.

1.3. **நிதிக்கூற்றுக்களிற்கான பிரதான கணக்கு கொடுக்கும் அலுவலரதும் கணக்கு கொடுக்கும் அலுவலரதும் பொறுப்புக்கள்**

----------------------------------------------------------------------------------------------------

பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு அமைவாக மற்றும் 2018 ஆம் ஆண்டு 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தில் 38 ஆவது பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமான உள்ளக நிருவாகத்தை தீர்மானித்தல் பிரதான கணக்கு கொடுக்கும் அலுவலரதும் கணக்கு கொடுக்கும் அலுவலரதும் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் பிரிவின் பிரகாரம் திணைக்களத்தால் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக் கூடியவாறு அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு சட்டத்தில்38(1) (இ) உப பிரிவு பிரகாரம் திணைக்களத்தின் நிதிக் கட்டுப்பாட்டுக்காக பயனுள்ள உள்ளக கட்டுப்பாட்டு முறைமை தயாரித்து பேணிச் செல்வதாக கணக்கு கொடுக்கும் அலுவலர் சான்றுப்படுத்த வேண்டுமென்பதுடன், அந்த முறைமையின் பயன் தொடர்பாக அவ்வப்போது மீளாய்வு செய்து அதன்படி முறைமையை பயனுள்ளதாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்களை மேற்கொள்ளுதல் வேண்டும்.

1.4. **நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்**

-----------------------------------------------------------------------------------------------

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்;

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை

வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது கூட்டுச்சதி, கள்ளத்தனம், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக திணைக்களத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

எனது கணக்காய்வில் அடையாளம் காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புகள், பிரதான உள்ளக கட்டுப்பாட்டு குறைப்பாடுகள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக கணக்கு கொடுக்கும் அலுவலரை அறிவுறுத்தப்பட்டது.

## 1.5 ஏனைய சட்டத்துடனான தேவைகள் தொடர்பான அறிக்கை

---------------------------------------------------------------------------

2018 ஆம் ஆண்டு 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தில் 6(1) (ஈ) பிரிவு மற்றும் 38 ஆவது பிரிவு பிரகாரம் பின்வரும் விடயங்களை குறிப்பிடுகின்றேன்.

(அ) நிதிக் கூற்றுகள் கடந்த ஆண்டுடன் தொடர்புடையதாக உள்ளது,

(ஆ) கடந்த ஆண்டுக்கு ஏற்புடையதாக உரிய நிதிக் கூற்றுகள் தொடர்பாக என்னால் முன்வைக்கப்பட்ட பரிந்துரைகள் நடைமுறைப்படுத்தப்பட்டிருந்தன.

## `1.6 நிதிக் கூற்றுகள் தொடர்பான அபிப்பிராயம்

### 1.6.1 காசுப் பாய்ச்சல் கூற்று

**பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.**

| கணக்காய்வு அவதானிப்பு | | பரிந்துரை | கணக்கு கொடுக்கும் அலுவலரின் அபிப்பிராயம் |
|---|---|---|---|
| (i) | காசுப் பாய்ச்சல் கூற்றில் ஆளுக்குரிய வேதனாதிகள் மற்றும் தொழில்பாட்டு செலவினமாக ரூபா.462,625,337 குறிப்பிடப்பட்டி-ருப்பினும், இணைந்த விபரமான பரீட்சார்த்த சமன்பாடு பிரகாரம் அந்த செலவினம் ரூபா.455,570,743 ஆகியதால் ரூபா .7,054,594 ஆன வேறுபாடு அவதானிக்கப்பட்டது. | காசுப் பாய்ச்சல் கூற்று மாதாந்த கணக்கு சாராம்-சம் மற்றும் திறை-சேரி குறிப்புகளு-டன் ஒப்பிட்டு சரியாக தயாரிக்க-ப்படுதல் வேண்டும். | தொழிற்பாட்டு செயற்பாடுகள் மற்றும் முதலீட்டு செயற்பா-டுகள் என்பவற்றுக்கு செல-விடப்பட்டுள்ள பணமாக நிதிக் கூற்றில் காட்டப்பட்டுள்ள மீதி பின்வருமாறு பெற்றுக்கொள்ள-ப்பட்டுள்ளது என்பதை தயவு-டன் அறியத் தருகின்றேன்.<br><br>ஆளுக்குரிய வேதனாதிகள் மற்றும் தொழில்பாட்டு செலவினம்= ரூபா.457,814,943 (ஏசீஏ-எப்)<br>**<u>சேர்த்தல்</u>**<br>அரசாங்க வருமானத்தில் மீள செலுத்தல்= ரூபா.5,063,924<br>(கட்டு நிதி ஒப்பிடுதல்)<br>**<u>கழித்தல்</u>**<br>புகையிரத திணைக்களத்தால் மேற்கொண்ட பற்று வைத்தல் = ரூபா.<u>253,530</u><br>(கட்டு நிதி ஒப்பிடுதல்)<br>தொழில்பாட்டு செயற்பாடுகளிலிருந்து உருவாகிய தேறிய காசுப் பாய்ச்சல்)<br><u>**= ரூபா.** 462,625,337</u> |

| | | | |
|---|---|---|---|
| (ii) | நிதி ஓட்டக் கூற்றில் தொழில்பாட்டு செயற்பாடுகளின்கீழ் செலவிடப்பட்ட காசுப் பாய்ச்சலில் மானியங்கள் மற்றும் மாற்றுதலின்கீழ் எந்தவொரு கொடுப்பனவையும் குறிப்பிடப்படாவிடினும், இணைந்த விபரமான பரீட்சார்த்த சமன்பாடு பிரகாரம் அதில் ரூபா.1,990,669 ஆன மீதி அவதானிக்கப்பட்டது. | காசுப் பாய்ச்சல் கூற்று மாதாந்த கணக்கு சாராம்சம் மற்றும் திறைசேரி குறிப்புகளுடன் ஒப்பிடப்பட்டு சரியாக தயாரிக்கப்படுதல் வேண்டும். | அபிப்பிராயம் தெரிவிக்கப்படவில்லை. |

## 1.6.2 ஆவணங்கள் மற்றும் புத்தகங்கள் பராமரிக்காமை

---

திணைக்களத்தால் பின்வரும் ஆவணங்களை பராமரிக்கப்படவில்லை

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கு கொடுக்கும் அலுவலரின் அபிப்பிராயம் |
|---|---|---|
| (அ) **பிணை ஆவணம்**<br>நிதி ஒழுங்குவிதி 891(1) பிரகாரம் பிணை வைக்க வேண்டிய அலுவலர்கள் மற்றம் ஊழியர்களின் தகவல்கள் உள்ளடக்கிய பிணை ஆவணம் தயாரிக்கப்படவில்லை | நிதி ஒழுங்குவிதி 891(1) குறிப்பிடப்பட்டுள்ள தகவல்கள் உள்ளடங்கும் வகையில் பிணை வைக்க வேண்டிய அலுவலர்கள் தொடர்பாக பிணை பதிவேடு பராமரித்தல் வேண்டும். | எதிர் வருங் காலத்தில் இந்த ஆவணம் தயாரிப்பதற்கு தேவையான ஆலோசனைகள் பொது திறைசேரிமூலம் பெற்றுக் கொண்டுள்ளதுடன், எதிர்வருங் காலத்தில் அதன்படி நடவடிக்கை மேற்கொள்வதாக தயவுடன் அறியத் தருகின்றேன். |
| (ஆ) **மின் உபகரணங்கள் தொடர்பான ஆவணம்**<br>நிதி ஒழுங்குவிதி 454(2) பிரகாரம் மின் உபகரணங்கள் தொடர்பான ஆவணம் பராமரிக்கப்படவில்லை | நிதி ஒழுங்குவிதி 454(2) இல் குறிப்பிடப்பட்டுள்ளவாறு அரச கட்டிடங்களில் அனைத்து மின்சார துணை கருவிகள் மற்றும் உபகரணங்கள் தொடர்பாக பொருட் பதிவேடு பராமரித்தல் வேண்டும். | பிரதான களஞ்சியத்தில் இதற்கு புறம்பாக ஆவணம் பராமரிக்கப்படுகின்றது என்பதை தயவுடன் அறியத் தருகின்றேன். |

### 1.6.3 கணக்கு கொடுக்கும் அலுவலரால் மேற்கொள்ள வேண்டிய சான்றுப்படுத்தல்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கு கொடுக்கும் அலுவலரின் அபிப்பிராயம் |
| --- | --- | --- |
| 2018 ஆம் ஆண்டு 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தில் 38 ஆவது பிரிவு பிரகாரம் திணைக்களத்தின் நிதி நிருவாகத்திற்காக பயனுள்ள உள்ளக கட்டுப்பாட்டு முறைமை தயாரித்து பேணிச் செல்லப்படுவதாக பிரதான கணக்கு கொடுக்கும் அலுவலர் சான்றுப்படுத்த வேண்டுமென்பதுடன், அந்த முறைமையின் பயன் தொடர்பாக அவ்வப்போது மீளாய்வு செய்யப்பட்டு அதன் பிரகாரம் முறைமைகளை பயனுள்ளவாறு முன்னெடுத்துச் செல்வதற்கு தேவையான மாற்றங்களை மேற்கொள்ள வேண்டுமாயினும், அந்த மீளாய்வுகள் எழுத்து மூலம் மேற்கொண்டு அதன் பிரதி கணக்காய்வாளர் அதிபதியிடம் சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும். ஆயினும் அவ்வாறான மீளாய்வுகள் மேற்கொண்டதற்கான கூற்றுகள் கணக்காய்வில் சமர்ப்பிக்கப்படவில்லை. | 2018 ஆம் ஆண்டு 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தில் 38 ஆவது பிரிவு பிரகாரம் நடவடிக்கை மேற்கொள்ளுதல் வேண்டும். | எதிர் வருங் காலத்தில் இது தொடர்பாக அரசாங்கத்தின் கணக்காய்வு பிரிவு மூலம் ஆலோசனைகளை பெற்றுக்கொண்டு தேவையான நடவடிக்கை மேற்கொள்வதாக தயவுடன் அறியத் தருகின்றேன். |

## 1.6.4 சட்டங்கள், விதிகள் மற்றும் ஒழுங்குவிதிகள் என்பவற்றுக்கு ஒழுங்கமையாமை

| அவதானிப்பு | | பரிந்துரை | கணக்கு கொடுக்கும் அலுவலரின் அபிப்பிராயம் |
|---|---|---|---|
| சட்டங்கள், விதிகள் மற்றும் ஒழுங்குவிதிகள் என்பவற்றின் தொடர் | ஒழுங்கமையாமை | | |
| 1982 ஆம் ஆண்டு 41 ஆம் இலக்க தேசிய மிருகக்காட்சி சாலை சட்டத்தின் பகுதி 111 | பணிப்பாளரிடம் ஆலோசனை வழங்குதல் மற்றும் அமைச்சர் அவர்களிடம் பரிந்துரைகள் முன்வைக்கும பணி பொருட்டு ஆலோசனை செயற்குழு அமைச்சர் அவர்களால் நியமனம் செய்யப்பட வேண்டுமாயினும், அவ்வாறு ஆலோசனை செயற்குழு நியமனம் செய்யப்படவில்லை. | மிருககாட்சி சாலை சட்டத்தின் பிரகாரம் நடவடிக்கை மேற்கொள்ளுதல் வேண்டும். | விடய பொறுப்பு அமைச்சர் அவர்களால் மிருகக்காட்சி சாலை தொடர்பில் ஆலோசனை வழங்குவதற்கு ஆலோசனை செயற்குழு நியமனம் செய்தல் இதுவரை மேற்கொள்ளவில்லை என்பதை தயவடன் றஅயித் தருகின்றேன். |

## 2. நிதிசார் மீளாய்வு

### 2.1 செலவின முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கு கொடுக்கும் அலுவலரின் அபிப்பிராயம் |
|---|---|---|
| இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதி ஒழுங்குவிதி 50 இற்கு அமைவாக வருடாந்த செலவின மதிப்பீடு தயாரிக்கப்பட வேண்டுமாயினும், திணைக்களத்தால் 2019 ஆம் ஆண்டுக்கு தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டின் செலவு விடயங்கள் 06 இல் 34% தொடக்கம் 84% வரையிலான எல்லைக்குள எஞ்சியிருத்தல் அவதானிக்கப்பட்டது. | சரியாக மதிப்பீடுகளை தயாரிக்கப்படுதல் வேண்டும். | தேசிய வரவு செலவு மதிப்பீட்டு திணைக்களத்தால் வெளியிடப்பட்ட வரவு செலவு சுற்றுநிருப இலக்கம் 03/2019, 04/2019, 05/2019 என்பவற்றுக்கு அமைவாக நடவடிக்கை மேற்கொள்ள வேண்டி ஏற்பட்டதால் இந்த செலவு விடயங்களில் எஞ்சியிருத்தல் ஏற்பட்டுள்ளது என்பதை தயவுடன் அறியத் தருகின்றேன். |

### 2.2 பொறுப்புகள் மற்றும் உடன்படிக்கைகளை மேற்கொள்ளுதல்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கு கொடுக்கும் அலுவலரின் அபிப்பிராயம் |
|---|---|---|
| இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதி ஒழுங்குவிதி 94 பிரகாரம் ஏதேனும் திணைக்களமொன்று ஒதுக்கீடுகளை விஞ்சி பொறுப்புகளை மேற்கொள்ளுதலாகாது எனிலும், 06 விடயங்களுக்கு ஏற்புடையதாக ரூபா.674,569 ஆன மீதிகளை விஞ்சி பொறுப்புகளை மேற்கொள்ள-ப்பட்டிருந்தது. | நிதி ஒழுங்குவிதி 94 பிரகாரம் நடவடிக்கை மேற்கொள்ளுதல் வேண்டும் | மேலதிக நேர கொடுப்பனவுகள், பிரயாணச் செலவுகள், உபசரணை மற்றும் சீருடைகள் என்பவற்றுக்கு ஒதுக்கீடுகளை விஞ்சி கொடுப்பனவுகளை மேற்கொண்டதன் காரணமாக மீதிகளை விஞ்சி பொறுப்புகளை மேற்கொள்ளப்பட்டுள்ளது. |

## 2.3 வைப்பு மீதிகள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கு கொடுக்கும் அலுவலரின் அபிப்பிராயம் |
|---|---|---|
| பெறுமதி ரூபா.5,373,650 ஆன வைப்புகளை சம்பந்தப்பட்ட கணக்குகளில் வரவு வைக்காது 02 ஆண்டுகள் தொடக்கம் 05 ஆண்டுகள் வரையிலான காலப் பகுதி பொது வைப்புக் கணக்கில் சேமித்து வைக்கப்பட்டிருந்தது. | பதிலளிக்காத மீதி-களை அரச வருமா-னத்தில் வரவு வைப்பதற்கு நடவடி-க்கை மேற்கொ-ள்ளுதல் வேண்டும். | 02 ஆண்டுகள் தொடக்கம் 05 ஆண்டுகள் வரையிலான காலப் பகுதிக்குள் பொது வைப்புக் கணக்கில் சேமித்து வைத்திருந்த மீதிகள் தொட-ர்பாக சம்பந்தப்பட்ட தரப்பு-களை அறிவுறுத்தப்பட்டதுடன், பதிலளிப்பு கிடைக்கப்பெறாத வைப்புகளை எதிர் வருங் காலத்தில் அரச வருமான-த்தில் வரவு வைப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்ப-டுமென்பதை தயவுடன் அறியத் தருகின்றேன். |

## 3. தொழில்பாட்டு மீளாய்வு

### 3.1 எதிர் பார்க்கப்பட்ட பயன் மட்டத்தினை அடையாமை

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கு கொடுக்கும் அலுவலரின் அபிப்பிராயம் |
|---|---|---|
| செயற்றிட்டத்தில் குறிப்பிடப்பட-டுள்ளவாறு 12 கருத்திட்டங்களுக்கு ஏற்புடையதாக ரூபா.மில்லியன் 145 ஒதுக்கீடு செய்திருப்பினும், அதில் 65.6 மில்லியன் ரூபா மட்டும் செலவிடப்பட்டிருந்தது. அதன்படி எதிர் பார்க்கப்பட்ட பயனை அடைந்துக் கொள்ளாமல் ஆண்டு இறுதியில் ரூபா.மில்லியன் 79.4 எஞ்சியிருந்தது. | செயற்றிட்டம் படி நடவடிக்கை மேற்-கொள்ளுதல் வேண்டும். | 2019 ஆண்டில் ஏப்பிரல் மாதம் நிகழ்ந்த பாஸ்கு தாக்குதல் காரணமாக தேசிய வரவு செலவு திணைக்களத்தால் வெளியிடப்பட்ட வரவு செலவு சுற்றறிக்கைகள் 03/2019, 04/2019, 05/2019 இலக்கங்கள் படி புதிய கருத்திட்டங்களை ஆரம்பிக்கப்படுதலாகாதெனவும், மூலதன செலவு விடயங்களில் 25% ஐ கட்டாயமாக மீதியாக்குதல் வேண்டுமெ-னவும் அறிவிக்கப்பட்டுள்ள-தால், நிருமாணிப்பு நடவடி-க்கைகளை ஆரம்பித்தல் மற்றும் வேலைகள் முடிவுறுத்துவதில் தாமதங்கள் ஏற்பட்டுள்ளது என்பதை தயவுடன் அறியத் தருகின்றேன். |

## 3.2 கருத்திட்டங்களை முடிவுறுத்தாது கைவிடல்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கு கொடுக்கும் அலுவலரின் அபிப்பிராயம் |
| --- | --- | --- |
| மதிப்பிடப்பட்ட பெறுமதி ரூபா. மில்லியன் 28.5 ஆன 05 கருத்திட்டங்களுக்கு ஏற்புடையதாக ஒப்பந்த கம்பெனிகளின் தாமதங்கள் காரணமாக 2019 ஆண்டு இறுதியில் முடிவுறுத்-தாது கைவிடப்பட்டிருந்தது. உடன்படிக்கை பிரகாரம் நடவடிக்கை மேற்கொள்ளாமை தொடர்பில் தேவையான நடவடிக்கை மேற்கொள்ளப்படவில்லை. | செயற்றிட்டம்படி நடவடிக்கை மேற்கொள்ளுதல் மற்றும் உடன்படிக்கை பிரகாரம் சம்பந்தப்பட்ட கருத்திட்டங்களை நிறைவெற்றிக்கொள்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளுதல் வேண்டும். | 03 கருத்திட்டங்களின் நிருமாணிப்பு நடவடிக்கைகளை முடிவுறுத்துவதற்காக 02 பிரேரணைகளை தேசிய யந்திரோபகரண நிறுவனத்திடம் 2019 ஆம் ஆண்டு நவம்பர் 27 ஆந் திகதி எழுத்துமூலம் அறவிக்கப்பட்டுள்ளது. ஆயினும் இதுவரை அந்த நிறுவனம் அதற்கு எழுத்து மூலமான பதில் வழங்கப்படவில்லை. திணைக்களத்தால் இந்த நிறுவனத்துடன் நடைபெற்ற கலந்துரையாடல்களின்போது இந்தக் கருத்திட்டங்களின் நிருமாணிப்பு நடவடிக்கைகளை மீண்டும் ஆரம்பிக்கப்படுவதாக வாய்மொழிமூலம் அறிவிக்கப்பட்டுள்ளது என்பதை மேலும் அறியத் தருகின்றேன். அதேபோன்று SBD/03 இல் 11.1 பிரிவுபடி வேலைகள் முடிவுறுகின்றது என்பதையும் தேவையான அளவையிடல்களை மேற்கொள்ளுமாறும் 2019 பெப்ருவரி 05 ஆந் திகதிய கடிதம்மூலம் தேசிய யந்திரோபகரண நிறுவனத்திடம் அறிவிக்கப்பட்டுள்ளதாக தயவுடன் அறியத்தருகின்றேன். |

## 3.3 சொத்துக்களின் முகாமைத்துவம்.

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கு கொடுக்கும் அலுவலரின் அபிப்பிராயம் |
| --- | --- | --- |
| தெகிவளை தேசிய மிருககாட்சி சாலை களஞ்சியத்திற்கு அருகாமையில் பெறுமதி ரூபா. 914,250 ஆன விலங்கு கூண்டு வலைகள் பயனற்று காணப்பட்டன. | விலங்கு கூண்டு வலைகளை பயன்படுத்துவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளுதல் வேண்டும். | தற்போது இந்த வலைகளில் 06 வலைகள் மட்டும் எஞ்சியுள்ளன. எதிர்வருங் காலத்தில் பயன் கொள்வதற்கு முடியுமாவதால் பயறுள்ளதாக இருக்கும் என்பதை அறிவத்துக் கொள்கின்றேன். |

## 3.4 முகாமைத்துவத்தின் குறைப்பாடுகள்

**பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கு கொடுக்கும் அலுவலரின் அபிப்பிராயம் |
| --- | --- | --- |
| (அ) பின்னவளை யானைகள் சரணாலயத்தில் யானைகள் தங்கு மிடங்களில் யானைகளின் கழிவுகள் மற்றும் எஞ்சிய உணவுகள் குவிக்கப்பட்டிருந்தமையால் சூழல் சுத்தமின்றி காட்சியளித்தது. | யானைகளின் கழிவுகளை மீள்சுழற்சி செய்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளுதல் வேண்டும். | பசளையாக பயன்படுத்துவதற்கு முடியுமான நிலைக்கு கொண்டுவருவதற்காக இயந்திரம் பெற்றுக்கொள்வறத்கு திட்டமிடப்படினும், நாட்டில் நிலவுகின்ற சூழ்நிலை காரணமாக மேற்கொள்வறத்கு முடியவில்லை. |
| (ஆ) நாரம்பெத்த யானைகள் தனிமைப்படுத்தல் நிலையத்தில் கழிவுநீர் வெளியேறுவதற்கு முறையான வடிகால் முறைமை நிருமாணிக்கப்படாமை காரணமாக எந்தவொரு சுத்திகரிப்புமின்றி அருகில் உள்ள மாஓயாவிற்கு விடுவிக்கப்பட்டிருந்தது. | முறையான வடிகால் முறைமை நிருமாணித்தல் வேண்டும் | நாரம்பெத்த யானைகள் தனிமைப்படுத்தல் நிலையத்தின் கழிவு நீரை துப்பரவு செய்-வதற்கு கழிவு நீர் சுத்திகரிப்பு முறைமை தாபிக்கப்படவில்லை. துப்பரவு செய்வறத்கு பயன்படுத்தும் கழிவு நீர் மற்றும் யானைகளின் சிறுநீர் மட்டும் இவ்வாறு கழிவு நீராக அங்கு |

| | | | |
|---|---|---|---|
| | | | உருவாகுவதுடன், அந்த அளவு மாஓயாவிற்கு வழிந்தோடும் அளவுக்கு சேர்வதில்லை. துப்பரவு செய்வதற்காக இரசாயன பொருட்களை பயன்படுத்தாமை காரணமாக கழிவு நீராக இயற்கை பொருட்கள் மட்டும் மாஓயாவிற்கு அகற்றப்படுவதால் துப்பரவின்மை ஏற்படுவதில்லை என்பதை தயவுடன் அறியத் தருகின்றேன். |
| (இ) | நீரை நிரப்புவதற்காக நில மட்டத்திலிருந்து 02 அடி உயரத்திலும், தன்னியக்கமாக நிரம்பும் வகையிலும் நீர் கொள்கலன்கள் உருவாக்கப்பட வேண்டுமாயினும், நாரம்பெத்த தனிமைப்படுத்தல் நிலையத்தில் வாழ்கின்ற யானைகளின் பொருட்டு நிருமாணிக்கப்பட்டிருந்த கொள்கலன்கள் தன்னியக்கமாக நிரம்பும் வகையில் நிருமாணிக்கப்பட்டிருக்கவில்லை. குடிப்பதற்கு நிருமாணிக்கப்பட்டிருந்த தாங்கிகளிலும் நீர் நிரப்பப்படவில்லை. | உரிய தரத்திற்கு அமைவாக நிருமாணிப்புகளை மேற்கொள்ளுதல் வேண்டும். | யானைகள் இல்லாத சந்தர்ப்பங்களில் தாங்கிகளில் நீரை நிரப்பி வைத்தில் அவசியமற்றதென தயவுடன் அறியத் தருகின்றேன். |
| (ஈ) | மத்திய சுற்றாடல் அதிகார சபையால் வெளியிடப்பட்ட 04459($R^{6}$) ஆம் இலக்க சுற்றாடல் பாதுகாப்பு அனுமதிப் பத்திரத்தின் நிபந்தனைகள் பிரகாரம், ஏதேனுமொரு இடத்தில் கழிவு நீரை அகற்றும்போது ஆகக் குறைந்தது அந்த நீர் கொள்ளளவு போன்று 8 மடங்கு துப்பரவான நீருடன் கலந்து விடுவித்தல் வேண்டும். அதற்கு முரணாக தெகிவளை மிருகக்காட்சிசாலையிலிருந்து அகற்றப்பட் நீரானது அருகில் உள்ள கல்வல என்ற இடத்திற்கு விடுவிக்கப்படுவதாக கணக்காய்வில் அவதானிக்கப்பட்டது. இவ்வாறு, கழிவு நீர் தரமின்றி விடுவிக்கப்படுவதால் | மத்திய சுற்றாடல் அதிகார சபையால் வழங்கப்படும் 04459($R^{6}$) இலக்கம் கொண்ட சுற்றாடல் பாதுகாப்பு அனுமதிப்பத்திரத்தின் நிபந்தனைகள் பிரகாரம் நடவடிக்கை மேற்கொள்ளுதல் வேண்டும். | காற்றோட்டம் தொடர்பான (Aeration) மூலோபாயங்களை உபயோகப்படுத்தி நீரின் தரத்தினை அதிகரிப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்வதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது என்பதை தயவுடன் அறியத் தருகின்றேன். |

| | | | |
|---|---|---|---|
| | சுற்றுபுறத்திலுள்ள நீர்வளங்கள் தூய்மையற்றதாவதற்கும். சுற்றுபுறத்தில் உள்ள மக்களின் சுகாதாரத்திற்கு பாதகமாகவும் அமைந்துள்ளது. | | |
| (c) | கால்நடை மருத்துவரால் விலங்குகளுக்கு வழங்குவதற்கு பரிந்துரை செய்கின்ற உணவுகளை நிறை வைக்காது அனுபவம் மற்றும் பரிச்சயம் என்பவற்றுக்கு அமைவாக வழங்கப்படுவதாக அவதானிக்கப்படுகின்றது. அதன்படி உணகளை உரிய அளவில் வழங்கப்படுகின்றதா என்பதை உறுதிப்படுத்திக் கொள்வதற்கு முடியாதுள்ளத. | கால்நடை மருத்துவரின் பரிந்துரை பிரகாரம் நடவடிக்கை மேற்கொள்ளுதல் வேண்டும். | விலங்குகளுக்கு வழங்கப்படும் இறைச்சிகளை மட்டும் நிறை வைக்கப்பட்டு பெற்றுக்கொள்வதுடன், ஏனைய பொருட்களை அனுபவம் மற்றும் பரிச்சயம்படி வழங்கப்படும். நிறையிடுவதற்கு காலம் எடுப்பதாலும் அதன் பொருட்டு உபகரணங்கள் போதுமற்றதாலும் எல்லாவற்றையும் நிறை வைப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளவில்லை. நிறை வைப்பதற்கு தேவையான உபகரணங்களை பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படுகிறது. |
| (C) | 2016 ஆண்டு 2020 ஆண்டு வரையிலான காலப் பகுதிக்குள் கோனபல கமநல பண்ணையில் பயிரிடும் நடவடிக்கைகளை உரிய திட்டம் பிரகாரம் மேற்கொள்ளவில்லை என்பதால் அதன் பயிரிடும் நடவடிக்கைகளை அதிகரித்து வெளியக நிறுவனங்களிடமிருந்து கொள்வனவு செய்கின்ற விலங்கு உணவுகளின் அளவினை குறைத்துக்கொள்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளவில்லை. | கோனபொல கமநல பண்ணையை அபிவிருத்தி செய்தற்கு நடவடிக்கை மேற்கொள்ளுதல் வேண்டும். | விவசாய பண்ணையில் பிரதானமாக CO4 புல், பிரிசந்தா புல், கங்குங், கரும்பு மற்றும் வாழை பயிர்ச் செய்கைகளை மேற்கொள்வதுடன், இந்த பயிர்ச் செய்கைகளை தெகிவளை மிருகக்காட்சி சாலையிடம் வழங்கப்படுகிறது. |

## 4. நிலையான அபிவிருத்தி நோக்கங்களை அடைந்துக் கொள்ளுதல்

| **கணக்காய்வு அவதானிப்பு** | **பரிந்துரை** | **கணக்கு கொடுக்கும் அலுவலரின் அபிப்பிராயம்** |
|---|---|---|
| திணைக்களத்தால் நிலையான அபிவிருத்தி நோக்கங்கள் மற்றும் இலக்குகளை அடையாளம் காணப்பட்டிருப்பினும், அவற்றை அடைந்து கொள்வதற்கு முடியுமான வகையில் செயற்றிட்டம் தயாரிக்கப்படவில்லை | செயற்றிட்டம் நிலையான அபிவிருத்தி நோக்கங்கள் மற்றும் இலக்குகளை அடைந்துக் கொள்வறத்கு முடியுமான வகையில் தயாரித்தல் வேண்டும். | நிலையான அபிவிருத்தி நோக்கங்கள் 15 இன்படி விலங்குகளின் பாதுகாப்பு நடவடிக்கைகளை மேம்படுத்துவதற்கு பாதுகாப்பு நிலையங்களை நிருமாணித்தல், யானைகள், அழிந்து போகும் அச்சுறுத்தலுக்கு உள்ளாகியுள்ள விலங்குகளை இனப் பெருக்கம் செய்வதற்கான முறைமைகளை தயாரித்தல், பார்வையாளர்களுக்காக விலங்குகளை காட்சிப் படுத்துவதன் மூலம் விலங்குகளும் அவை வாழ்கின்ற சுற்றுச் சூழலும் தொடர்பாக விழிப்புணர்வு நிகழ்ச்சிகளை மேற்கொள்ளுதல் பற்றி உறுதியான இலக்குகளை அடையாளம் காணப்பட்டுள்ளதுடன், அவற்றை செயற்றிட்டம் ஊடாக அடைந்துக் கொள்வறத்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது என்பதை தயவுடன் அறியத் தருகின்றென். |

## 5. மனிதவள முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கு கொடுக்கும் அலுவலரின் அபிப்பிராயம் |
|---|---|---|
| திணைக்களத்தின் வெற்றிட பதவிகள் 124 காணப்பட்டதுடன், அதில் சிரேட்ட மட்டத்திலான 03 பதவிகளும், இடைநிலை மட்டத்தில் 31 பதவிகளும் நிலவியதால் திணைக்களத்தின் தொழில்பாட்டு வினைத்திறமை ஆகக் குறைநத மட்டத்தில் காணப்பட்டது. | தேவையான வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளுதல் வேண்டும். | இந்த பதவிகளில் சிரேட்ட மட்டத்திலான 3 பதவிகளை நிரப்புவதற்கு தேவையான தகவல்கள் பொது நிருவாக மற்றும் உள்நாட்டலுவல்கள் அமைச்சிடம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. திணைக்களத்தின் இடைநிலை மட்ட- |

த்திலான 30 பதவிகளை பூர்த்தி செய்வதற்கு திணைக்களத்தால் 2019 ஆம் ஆண்டில் நடவடிக்கை மேற்கொண்ட போதிலும் 2019 ஆம் ஆண்டில் நடைபெற்ற சனாதிபதி தேர்தல் மற்றும் 2020 ஆண்டில் நடைபெற்ற பாராளுமன்ற தேர்தல் காரணமாக குறித்த ஆட்சேர்ப்புகள் தற்காலிகமாக இடைநிறுத்த நேரிட்டது என்பதை தயவுடன் அறியத் தருகின்றேன்.